# மாணவர்களால் முடியும்!

## ● சுற்றுச்சூழல் மேம்படுத்தும் நடவடிக்கையில்...

## ● விழிப்புணர்வு முகமை நிகழ்ச்சியில் அழைப்பு

**குன்னூர், அக். 11-**

**'சுற்றுச்சூழலை மேம்படுத்த மாணவர்களின் சக்தி அவசியம்' என விழிப்புணர்வு கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.**

உயிர்ச்சூழல் மண்டலமாக உள்ள நீலகிரியில், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இருப்பினும், வனங்கள் தொடர்ந்து அழிக்கப்படுவதால், வெப்பமயமாதல் அதிகரிக்கிறது. இதைக் கட்டுப்படுத்த, பல அமைப்பினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சுற்றுச்சூழலை மேம்படுத்த மாணவர் சக்தி அவசியம் என, கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அருவங்காடு கார்டைட் தொழிற்சாலை சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகமை நிகழ்ச்சி, தொழிற்சாலை கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

பள்ளி முதல்வர் லெனின் பேசுகையில், ''தற்போது பிளாஸ்டிக் பயன்பாடு இயற்கைக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. பிளாஸ்டிக் பைகளை கழிவுநீர் கால்வாயில் வீசியெறிவதால், கால்வாய் அடைபட்டு மழைக் காலங்களில் வெள்ளம் வீடுகளுக்குள் தஞ்சம் புகுகிறது.

மண்ணில் மக்காமல் உள்ள பிளாஸ்டிக்குகளால் மண் சரிவு, நிலச்சரிவு ஏற்படுகின்றன; பிளாஸ்டிக்கின் விபரீதத்தை மாணவச் சமுதாயம் உணர வேண்டும்,'' என்றார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, ஜனாபதி விருது பெற்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன் பேசியதாவது:

ஒரு மனிதனின் ஆயுட் காலத்துக்கு தேவையான ஆக்சிஜனை ஒரு மரம் ஆறு மாதங்களில் தருகிறது. 'உயிர் வாழ ஒரு மரம்' என்ற திட்டத்தை பள்ளிகளில் அறிமுகப்படுத்தி வருகிறோம். பள்ளி மாணவ, மாணவியர், மரக்கன்றுகள் நடுவதில் ஆர்வம் காட்ட வேண்டும்; கடைகளில் தற்போது பிளாஸ்டிக் புழக்கம் அதிகரித்துள்ளது; பிளாஸ்டிக் கேரி பேகுகளில் பொருட்களை வாங்கக் கூடாது; முதலில் நாம் திருந்த வேண்டும்; அப்போது தான், சமுதாயத்தை திருத்த முடியும்.

சுற்றுச்சூழலை மேம்படுத்த மாணவச் சமுதாயத்தின் சக்தி அவசியம்; சுற்றுச்சூழல் மேம்படுத்தவும், தேவையான அறிவுரை, பயிற்சியை பெறவும் மாணவர்கள் தயாராக உள்ளனர்; அவர்களை தயார்படுத்த பொதுநல ஆர்வலர்கள், ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு, யோகநாதன் பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற, அருவங்காடு கார்டைட் தொழிற்சாலை பொது மேலாளர் அசோக்குமார், கார்டைட் தொழிற்சாலை பணி மேலாளர் கிருஷ்ணமூர்த்தி பேசினர்.

மரங்கள் அழிவால் ஏற்படும் விபரீதங்களை விளக்கும் 'தாகம்' என்ற குறும்படம் காண்பிக்கப்பட்டது.

தொழிற்சாலை கூடுதல் பொது மேலாளர் அனில்குமார், அதிகாரிகள், தொழிற்சங்க நிர்வாகிகள், அருவங்காடு கார்டைட் தொழிற்சாலை, கேந்திரிய வித்யாலயா, பாதுகாப்பு தொழிலாளர்கள் மெட்ரிக்., பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

கார்டைட் தொழிற்சாலை பள்ளி ஆசிரியர் மணி, நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்; தொழிற்சாலை மக்கள் தொடர்பு அதிகாரி லூயிஸ் காகா நன்றி கூறினார்.



அருவங்காடு கார்டைட் தொழிற்சாலை கலையரங்கில் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகமை நிகழ்ச்சியில், மரக்கன்று நடப்பட்டது.

### வளாகத்தில் நடவு

கடந்த 1920ல், கோவை கூட்டுறவு வங்கிக்கு வந்த மகாத்மா காந்தியடிகள், நாவல் மரக்கன்று நடவு செய்தார்; அந்த மரக்கன்று தற்போது பிரம்மாண்டமாய் வளர்ந்து நிற்கிறது; அந்த மரத்தில் இருந்து பெறப்பட்ட மரக்கன்றை, சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன், தொழிற்சாலை நிர்வாகத்துக்கு வழங்க, தொழிற்சாலை பொது மேலாளர் அசோக்குமார், கலையரங்க வளாகத்தில் நடவு செய்தார்.